## சுருக்கம்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் – பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப் படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதரப் பட்ட மேற்படிப்புகளுக்கு – ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் மேலும் 2000 ரூபாய் கூடுதலாக உயர்த்தி வழங்க – அனுமதி அளித்து – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை

அரசாணை (நிலை) எண்.66

நாள்:01.10.2014

ஜய வருடம் – புரட்டாசி 15

திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.13, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, நாள் 20.04.2007.
2. அரசாணை (நிலை) எண்.29, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, நாள் 28.03.2008.
3. அரசாணை (நிலை) எண்.60, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, நாள் 27.05.2008.
4. அரசாணை (நிலை) எண்.103, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 25.03.2013.
5. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண்.எப்1/1952/2012, நாள் 03.07.2013 மற்றும் 21.03.2014.

*****

ஆணை:

மேலே முதலாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியங்கள் அமைக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவது போன்று கல்வி உதவித் தொகைகள் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்றத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப் படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதர பட்ட மேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2000/– வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்டக் கடிதத்தில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையில் ஆணையிடப்பட்டுள்ளதைப் போன்று இத்துறையின் கீழே செயல்படும் சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதரப் பட்ட மேற்படிப்புகளுக்கு

தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் மேலும் ரூ.2000 கூடுதலாக உயர்த்தி வழங்கக் கோரி அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

4. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப் படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதர பட்ட மேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் மேலும் ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) கூடுதலாக உயர்த்தி வழங்கி ஆணையிடுகிறது. இவ்வாறு கல்வி உதவித் தொகையினை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை இவ்வாரியங்களுக்கான ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.53409/பி,மிபி/2014, நாள் 26.09.2014–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் – செயலர் மற்றும்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை–5.
தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர் – செயலர்
மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை–5.
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், வருவாய் துறை, சென்னை–9.
அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை–6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்
பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சென்னை–2.
முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
நிதி (வரவு–செலவு,பொது–I,II)/பி,மிபி/வருவாய்/பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச் செயலாளர், சென்னை–9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்